உயர் கல்வித் (இ1) துறை

கடித (நிலை) எண்.211, நாள். 1.11.2012

அனுப்புநர்
முனைவர். தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரி கல்வி இயக்குநர்,
சென்னை–6.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

அம்மையீர்,

பொருள். கல்லூரிக் கல்வி – சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – புதிதாக சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க வழிகாட்டு நெறிமுறைகள் – தொடர்பாக.

பார்வை.1. அரசுக் கடிதம் (நிலை) எண்.152, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.23.6.2011.
2. அரசுக் கடிதம் எண். 17861/இ1/2011–2, நாள்.16.9.2011.
3. தங்களின் கடிதம் எண்.21535/ஆர் 1/ 2011, நாள்.12.7.2012.

*******

பார்வை ஒன்றில் காணும் அரசுக் கடிதத்தில், அரசின் நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்க அரசின் அனுமதி வேண்டி மண்டல கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆய்வறிக்கையுடன் கல்லூரிக் கல்வி இயக்குநரால் அனுப்பி வைக்கப்படும் கருத்துருக்களை பரிசீலிக்க ஏதுவாக, கல்வி முகமைகளிடமிருந்து மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கல்லூரிகளுக்கான நிலத்தின் விபரம், அந்நிலம் விவசாய நிலமாக இருக்கும்பட்சத்தில் அதற்கு உரிய அனுமதி பெறப்பட்டு அந்நிலத்தில் கல்லூரிக்கான கட்டிடங்கள் கட்ட நகர் ஊரகமைப்புத் துறையின் (Town and Country Planning) ஒப்புதல் பெறப்பட்டுள்ள விபரம் மற்றும் அத்துறையின் ஒழுங்குமுறைகளின்படி (Regulations) அந்நிலத்திற்கான மண்டலம் விபரம் மேலும் கல்லூரிகளின் ஆய்வக கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் போக்குவரத்து நெரிசல், சுற்றுப்புறச்சூழல், சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் கல்லூரிக்கான கட்டிட அமைப்பு (மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் உட்பட) ஆகியவற்றின் மீது ஆய்வு செய்து ஆய்வறிக்கையினை நேரடியாக அரசுக்கு அனுப்புமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

2. பின்னர், பார்வை இரண்டில் காணும் அரசுக் கடிதத்தில், சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்குவது தொடர்பாக விண்ணப்பங்கள் ஆய்வு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய சரிபார்ப்பு படிவம் வெளியிடப்பட்டு, அதன்படி ஆய்வறிக்கை மற்றும் பரிந்துரையை 45 நாட்களுக்குள் அரசின் பரிசீலனைக்கு அனுப்புமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

3. இந்நிலையில், பார்வை 3–இல் காணும் கடிதத்தில் 2013–2014–ஆம் கல்வியாண்டுக்கான சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குவது தொடர்பான விண்ணப்பங்களை ஆய்வு செய்வதற்கு, சரிபார்ப்பு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆய்வறிக்கை மற்றும் பரிந்துரையினை 45 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும் என்கிற காலவரையறையை நீக்கம் செய்யலாம் என கல்லூரி கல்வி இயக்குநர் பரிந்துரைத்து அதன் மீது அரசின் ஆணையை கோரியிருந்தார்.

4. மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, இனி வரும் காலங்களில் (2013–2014 கல்வியாண்டு முதல்) சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்குவது தொடர்பான விண்ணப்பங்களை ஆய்வு செய்வதற்கு மாவட்ட வருவாய் அலுவலரின் ஆய்வறிக்கை மற்றும் பரிந்துரை போதுமானது என முடிவு செய்து, அவ்வாய்வறிக்கை மற்றும் பரிந்துரை 90 நாட்களில் அரசுக்கு அனுப்பப்பட வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர்களை அரசு அறிவுறுத்துகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்காக

நகல்
அனைத்து மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர்கள்.
உயர் கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர் கல்வித்துறை, கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
அரசுக் கடிதம் (நிலை) எண்.152 மற்றும் 153, உயர் கல்வித் (இ1)துறை, நாள்.23.6.2011.
அரசுக் கடிதம்.17861/இ1/2011–1, உயர் கல்வித்துறை, நாள்.16.9.2011.
இ.கோ / உதிரி.,